

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.10.2025) இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 176 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிலான 109 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 134 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 150 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ. முருகேசன், இராம. கருமாணிக்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாட்டுக்கே வழிகாட்டும் திட்டங்களைச் செயல்படுத்தும்

# ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடரத் துணை நிற்கும் மக்களின் உறுதி!

## இராமநாதபுரம் அரசு விழாவையொட்டி — முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

இராமநாதபுரம், அக். 4-

இராமநாதபுரத்தில் நேற்று அரசு விழாவில் கண்ட மக்களின் எழுச்சி குறித்து வலைதளத்தில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டி, நாட்டுக்கே வழிகாட்டும் திட்டங்களைச் செயல் படுத்தி வரும் நம்முடைய ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடரத் துணை நிற்கும் உங்கள் அனைவரின் உறுதியை, இராமநாதபுரம் மக்களிடம் கண்டேன்!” என்று குறிப்பிட்டார்.

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**தவறு செய்தவர்கள் தவழ்ந்து சென்று தஞ்சமடையும்** Washing Machine**தான் பா.ஜ.க.**

**அங்கு சரணாகதி அடைந்து விட்டு, தமிழ்நாட்டுக்கு எதிரான செயல்களுக்குத் துணைபோகும் கொள்கையற்ற கூட்டத்தைப் புறந் தள்ளி, “தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டி, நாட்டுக்கே வழிகாட்டும் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் நம்முடைய ‘திராவிட மாடல்’ ஆட்சி தொடரத் துணை நிற்கும் உங்கள் அனைவரின் உறுதியை, இராமநாதபுரம் மக்களிடம் கண்டேன்!”**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.10.2025) இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். உடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் உள்ளார்.





இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில் கலந்து கொள்ள வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (2.10.2025) மதுரை விமான நிலையத்தில், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் (2.10.2025) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, அமைச்சர்கள் எஸ். இரகுபதி, மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.10.2025) இராமநாதபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 50,752 பயனாளிகளுக்கு 426 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்வில், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், செ.முருகேசன், இராம. கருமாணிக்கம், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.1.55 கோடி மதிப்பில் — சிவகங்கை — இடைக்காட்டூர் கிராமத்தில் உள்ள தொன்மையான

# திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில் புனரமைத்தல் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு!

**சிவகங்கை, அக். 4-**

**சிவகங்கை, இடைக்காட்டூர் கிராமத்தில் உள்ள தொன்மையான திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில் மொத்தம் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணியினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2.10.2025, அன்று சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட இடைக்காட்டூர் கிராமத்தில் உள்ள தொன்மை வாய்ந்த திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில், மொத்தம் 1கோடியே 55 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள இடைக்காட்டூர் கிராமத்திலுள்ள திரு இருதய ஆண்டவர் தேவாலயமானது, 1866ஆம் ஆண்டு, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அருட்தந்தை ஆர்.பி. பெரிடினாட் செல்ஸ் அவர்களால் கட்டப்பட்டது. சுமார் 159 ஆண்டுகள் பழமைவாய்ந்த இந்த தேவாலயத்தில் ஆண்டுதோறும் ஈஸ்டர் திருநாளை அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை “இடைக்காட்டூர் பாஸ்கா” என்ற திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். இத்திருவிழாவில் சிவகங்கை உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொள்வார்கள்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப் பின்னர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தொன்மையான கிறிஸ்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள அரசு நிதியுதவி அளித்து வருகிறது. அத்திட்டத்தின் கீழ், சிவகங்கை மாவட்டம், இடைக்காட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள தொன்மையான திருஇருதய ஆண்டவர் தேவாலயத்தில் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு மொத்தம் 1கோடியே 55 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் முதல் கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ள 77 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அருங்காட்சியகம் அமைத்தல், பழுதடைந்த நிறம் மாறிய ஜன்னல்கள் கண்ணாடிகளை சீர் செய்தல், தேவாலய நிகழ்வுகளை அனைவருக்கும் தெளிவாக கேட்கும் வகையில் ஒளி அமைப்பை சீர் செய்தல், பழுதான மின் சாதனங்களை மாற்றியமைத்தல், சேதம் அடைந்துள்ள பகுதியில் புதிய வண்ணம் பூசி பொலிவுறச் செய்தல், போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இராமநாதபுரத்தில் நாளை நடைபெறவுள்ள அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் மதுரையிலிருந்து சாலை மார்க்கமாக இராமநாதபுரம் செல்லும் வழியில், சிவகங்கை மாவட்டத்தில் இடைக்காட்டூர் கிராமத்தில் உள்ள தொன்மையான இருதய ஆண்டவர் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பணிகளை விரைவாகவும், சிறப்பான முறையிலும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், திருமதி தமிழரசி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா.பொற்கொடி, மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, சிவகங்கை மறை மாவட்ட ஆயர் ஆனந்தம், இடைக்காட்டூர் திருத்தல பங்கு தந்தை ஜான் வசந்தகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.10.2025), சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட இடைக்காட்டூர் கிராமத்தில் உள்ள தொன்மை வாய்ந்த திரு இருதய ஆண்டவர் தேவாலயத்தில், மொத்தம் 1 கோடியே 55 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, சிவகங்கை மறை மாவட்ட ஆயர் ஆனந்தம், இடைக்காட்டூர் திருத்தல பங்குத் தந்தை ஜான் வசந்தகுமார் உள்ளிட்ட பேராயர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.